# 49. திருப்புலியூர்.

பண் - நட்டபாடை.

முத்த மன்னநகை மங்கைய ராடவர் மூழ்கி விளையாடுஞ்
சுத்த மன்னுசர சுக்களுஞ் சோலையுஞ் சூழ வனப்பேறும்
அத்த மின்னுமணி மன்று விளங்க வலங்கு புலியூரில்
நித்த மின்னுகுக னென்மன தைக்கவர் நீர்மையறியேனே. 1

**மா**சறு வானவர் மானவ ரேத்திட மங்கை சிவகாமி
ஏசறு தூவுள நன்கு களிக்க வியங்கு கரம்வீசி
ஆசறு மோர்சிவ னாரரு ணாடக மாடும் புலியூரில்
நேச மகாகுக னென்மன தைக்கவர் நீர்மை யறியேனே. 2

**மா**ய மதர்ப்பின் மயங்குநர் காணரு மாண்பு பெருகீசர்
தூய வனற்கையர் மாலொடு நான்முகன் சூழுந் திருப்பாதர்
ஆய மதிச்சடை யாரரு ணாடக மாடும் புலியூரில்
நேய முடைக்குக னென்மன தைக்கவர் நீர்மை யறியேனே. 3

**கோ**ளி லருந்தவ மோங்கு பதஞ்சலி கூர்த்த புலிக்காலன்
நாளு மகிழ்ந்திட ஞான மணங்கமழ் நாத ருயர்வேள்வி
யாளர் புகழ்ந்திடச் சங்கரர் நாடக மாடும் புலியூரில்
நீள வயிற்குக னென்மன தைக்கவர் நீர்மை யறியேனே. 4

**வி**ற்கர மன்னருங் கண்டு களிக்க வியன்கொள் பொருளீயும்
நற்கர மைந்தர்க ணாளு மவாமரு ணம்பர் திருப்பாதம்
பொற்கர மின்சடை யாடம காநடம் பொங்கு புலியூரில்
நிற்கிற வொண்குக னென்மன தைக்கவர்நீர்மை யறியேனே. 5

**கா**ண்ட னினைத்தலின் றொண்பொரு ளோடு கலாவு மறிவாளர்
ஆண்டவ னைத்துணை வேண்டுநர் யாவரு மன்பி னினிதோங்கத்
தாண்டவ நித்தலுஞ் செய்பர மேசுரர் தங்கு புலியூரில்
நீண்ட வயிற்குக னென்மன தைக்கவர் நீர்மை யறியேனே. 6

**ம**ட்டில் சிதம்பரந் தில்லைபொ னம்பல மன்று நடக்கோயில்
தட்டி னறும்புண்ட ரீகபு ரந்தக ராலய மாவிதயம்
இட்டர் தொழும்பிர மப்புரஞ் சிற்சபை யென்னும் புலியூரில்
நிட்டை தருங்குக னென்மன தைக்கவர் நீர்மை யறியேனே. 7

**த**கர மணக்கு நெடுங்குழன் மாதருஞ் சந்த மணிமார்புக்
*குமரர் குழுக்களுங் கந்தசு வாமி குகேச வெனக்கூவிச்
சிகரம் வளைத்துவந் திக்கு நறுந்தொழில் சேரும் புலியூரில்
நிகரி லருட்குக னென்மன தைக்கவர் நீர்மை யறியேனே. 8

---

** இவ்வடி முதற்சீர் உயிரெதுகையும், மூன்றாமெழுத்தொன்றெதுகையுமாம்.*

**ப**லமுய ரச்சுதன் பங்கய னத்திரம் பங்க முறவுண்டே
உலவிய வச்சிர வேலர சேமிடி யோட்டி யெமையாளும்
வலமுயர் முத்தைய காவென வேத்துநர் மல்கு புலியூரில்
நிலவு மயிற்குக னென்மன தைக்கவர் நீர்மை யறியேனே. 9

**பொ**ன்றிக ழுங்குய மான்மகள் வான்மகள் புந்தி களிகூர
என்று மியங்குமெம் மான்புகழ்க் கோனிறை யென்று துதிபாடு
கின்றவர் வெங்கவ னீங்கி நலங்கொளக் கேடில் புலியூரில்
நின்றரு ளுங்குக னென்மன தைக்கவர் நீர்மை யறியேனே. 10

சார்வரி வருடம் (கி.பி. 1900) ஆவணி மாதம் 21ஆம் தேதி புதவாரம்.